பிராட்வே பேருந்து நிலையம்

*837 வினா — திரு. எஸ், ஜே. இராமசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1975-ம் ஆண்டு சென்னை நகரில் பிராட்வே பஸ் நிலையம் புதுப்பிக்கப்பட்டதற்கு மாநகராட்சியால் எவ்வளவு தொகைக்கு மதிப்பீடு போடப்பட்டது. முடிவு பெறும்போது செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) மேலும் இந்த பஸ் நிலையத்தை விரிவுபடுத்தி கடைகள் கட்டி வாடகைக்கு விடும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) 1975-ம் ஆண்டு சென்னை நகரில் பிராட்வே பஸ் நிலையம் புதுப்பிக்கப்படுவதற்கு மாநகராட்சியால் மதிப்பீடு போடப்பட்ட தொகை ரூ. 6,30,190, முடிவு பெறும்போது செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 5,92,186.07.

(ஆ) ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த பிராட்வே பஸ் நிலையம் விரிவடையச் செய்யும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது; அங்கே அதிகமான இட வசதியில்லாத காரணத்தினால் பல அடுக்கு மாடிகள் கொண்ட பேருந்து நிலையமாக ஆக்குவதற்கு முந்தைய அரசு—முந்தைய அரசு கூட அல்ல, அதற்கு முந்தைய காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே திட்டம் இருந்ததாகத் தெரிகிறது. அது எந்த அளவுக்கு தற்பொழுது இருக்கிறது. அது செயல்பட இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, எஸ்பிளனேடு பகுதியிலுள்ள பழம்-பூ அங்காடியினை புதுப்பிக்கும் திட்டத்தின் ஓர் அங்கமாக, பிராட்வே பேருந்து நிலையத்தினை நவீனமுறையில் திருத்தியமைக்கும் உத்தேசமுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம் மேம்படுத்தப்படவும் கடைகளும், அலுவலகங்களும் இணைந்த பல உபயோக கட்டிடங்கள் அமைக்கப்படவும் உள. இத்திட்டம் ஆரம்ப கட்டத்தில் உள்ளது. விரிவான திட்ட வடிவமைப்புகள் இனிமேல்தான் உருவாக்கப்பட வேண்டும். இப்பணியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும், சென்னை மாநகராட்சியும் இணைந்து செயல்படுகின்றன.

1978 ஏப்ரல் 7]

(முற்பகல் 9-30)

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, பிராட்வே பஸ் நிலையம் புதுப்பிப்பதற்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட செலவு குறைவாகச் செய்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படியானால் அந்தத் திட்டம் பிறகு மாற்றி அமைக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே; அதைப்பற்றி தகவல் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரிடம் இருந்து நான் தெரிந்து கொள்ள விரும்பியது முன்னாலே, இடவசதி இல்லாத காரணத்தினால், கீழே பேருந்துகளை நிறுத்திவைக்க இடவசதி இல்லாத காரணத்தினால்; பல அடுக்கு மாடி கட்டிடங்களை அமைத்து அந்த மாடிகளில் பேருந்துகள் நிறுத்திவைக்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டதே; அந்த நிலை தற்போது எப்படி உள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நவீன முறையில் திருத்தி அமைக்க உத்தேசம் உள்ளது என்று சொன்னேன். இதற்கிடையில் அரசு சென்னை பெருநகர் அபிவிருத்தி ஆணைக்குழுவின் செயலாளர் சென்னை மாநகராட்சி ஆணையர் சென்னை கலெக்டர் ஆகியோரைக்கொண்ட ஒரு குழுவை அமைத்து இத்திட்டத்தை நடத்திச் செல்லுமாறும் இது பற்றி அவ்வப்போது அரசுக்குத் தெரிவிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை வரவேண்டியுள்ளது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பேருந்து நிலையம் ஒரு முனிசிபாலிடி பஸ் ஸ்டாண்டை விட மிகவும் மோசமாக இருக்கிறது. ஒரு மாநகராட்சியிலே, பல லட்சக்கணக்கான மக்கள் வாழக்கூடிய இடத்தில் இருக்கக்கூடிய பஸ் ஸ்டாண்டாக இல்லை. எனவே மிகப் பெரிய இடமாகப் பார்த்து, மக்களுடைய போக்குவரத்துக்கு ஏற்றவகையில் நவீன வசதிகளைக் கொண்ட ஒரு பஸ் நிலையம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே நான் முன்னாலேயே கூறியிருந்தேன். பெரிய பேருந்து நிலையம் நவீன வசதிகளோடு திருத்தி அமைக்கும் உத்தேசம் இருக்கிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பிராட்வே பஸ் நிலையத்தில் பிரயாணிகளுக்கும் மூட்டை சுமக்கும் தொழிலாளர்களுக்கும் அடிக்கடி தகராறு வருவதால் அது போலீஸ் ஸ்டேஷன் வரை போகிற அளவுக்கு இருக்கிறது. ரயில்வே ஸ்டேஷனில் இருப்பதைப் போல போர்ட்டர்களை நியமித்து ஏற்பாடு செய்யும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, 15.9.77 அன்று பாரம் சுமக்கும் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிப்பு வந்திருக்கிறது. நோட்டீஸ் காலம் எல்லாம் முடிந்துவிட்ட காரணத்தினால் விரைவிலே கூலி நிர்ணயம் ரயில்வே போர்ட்டர்களைப் போல் அல்லாமல் இவர்களுக்கு இன்னும் அதிகமாக இருக்கக்கூடிய வகையில் அறிவிப்பு வர இருக்கிறது. அந்த அறிவிப்பு வந்த பிறகு இந்த வழக்குகள் சுமுகமாகத்தீர்ந்துவிடும், தகராறு இருக்காது என்று உறுதியாக நம்புகிறேன்.

திரு. கா. ந. சண்முகம்: தலைவர் அவர்களே, பயணிகள் தங்குவதற்கு வசதியில்லாமல், பல பகுதிகளில் இருந்து வரும் பயணிகள் பிராட்வே பஸ் நிலையத்தில் அவதிப்படுகிறார்கள். இதற்கு வகைசெய்கிற வகையில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அதைப்பற்றி முறையீடு கொடுத்தால் மெட்ராஸ் மெட்ரோ பாலிடன் டெவலப்மன்ட் அதாரிட்டியைக் கலந்து ஆவன செய்ய முயற்சி செய்யப்படும்.

அரியலூர் நகருக்குக் குடிநீர் வழங்கு திட்டம்

வினா *838 திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் நகருக்கு கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; அரியலூர் நகருக்குக் கொள்ளிடத்தில் இருந்து குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு அதிகம் செலவாகும் எனக் கருதப்படுவதால், ஆழ்துளைக் கிணறுகள் மூலம் குடிநீர் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆராயப்படுகின்றன.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975-ஆம் ஆண்டு அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கொள்ளிடத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்காகத்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அங்கு தமிழ்நாடு சிமெண்ட் தொழிற்சாலை வருகிற காரணத்தால், தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்து கொள்ளிடத்தில் இருந்து தண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி செய்யுமா?